## 4. SGSY

### 4.31 விற்பனை வளாகங்களுக்கு மீண்டும் "பூமாலை" என்ற பெயரையே வைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி (ம) பஞ்சாயத்து ராஜ் (மஅதி–2) துறை

அரசாணை (நிலை) எண். 62 நாள் : 27.6.2006

படிக்க :

1. அரசு ஆணை நிலை எண்.192, ஊரக வளர்ச்சி துறை, நாள் 19.7.2000
2. அரசு ஆணை நிலை எண்.175, ஊரக வளர்ச்சி துறை, நாள் 27.7.2001
3. ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை – 15 கடித எண்.46003/2006/எஸ்ஜிஸ்ஓய் 3–1, நாள் 16.6.2006.

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் மகளிர் சுய உதவி குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் விற்பனை செய்ய மாவட்டங்களில் விற்பனை வளாகங்கள் கட்டப்பட்டு அவற்றிற்கு "பூமாலை" வணிக வளாகங்கள் என பெயரிடப்பட்டது. மீண்டும் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் "பூமாலை" வணிக வளாகங்கள் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்ட விற்பனை வளாகங்கள்" என பெயர் மாற்றப்பட்டது.

2. 2006–2007ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் "மகளிர் சுய உதவி குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்க தொடங்கப்பட்ட பூமாலை திட்டம் மீண்டும் சிறந்த முறையில் இயங்க வழிவகை செய்யப்படும்'' என குறிப்பிடப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி இயக்குநரும் மாவட்டங்களில் உள்ள பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட வளாகங்களுக்கு ''பூமாலை'' விற்பனை வளாகங்கள் என்ற பெயரையே வைக்கலாம் என கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்த பின்னர் மாவட்டங்களில் உள்ள பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்ட விற்பனை வளாகங்களுக்கு "பூமாலை" விற்பனை வளாகங்கள் என்ற பெயரையே வைக்கலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. அனைத்து மாவட்டங்களிலும் "பூமாலை" விற்பனை வளாகம் என்ற பெயரை வைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்